மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர்

# சீதாராம் யெச்சூரி மறைவு!



புதுடெல்லி, செப். 13-
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி நேற்று மறைவெய்தினார்.

மறைந்த சீதாராம் யெச்சூரி அவர்கள் 1952ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12 அன்று சென்னையில் பிறந்தவர். இவரது சொந்த மாநிலம் ஆந்திரா. பள்ளிப்பருவம் முதல் இந்திய மாணவர் சங்கத்தில் சேர்ந்து பயணித்தவர்.

மேற்கு வங்கத்திலிருந்து 2005 ஆம் ஆண்டு மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றினார்.

சீதாராம் யெச்சூரி அவர்கள் மார்ச்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் பல பொறுப்புகளை வகித்தவர்.

மூச்சுத்திணறல் காரணமாக கடந்த மாதம் 19ந் தேதி டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், சீதாராம் யெச்சூரி பூரண நலம் பெற விழைகிறேன் என அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

அண்மையில் அவர் கண்புரை அறுவை சிகிச்சை செய்து கொண்ட சீதாராம் யெச்சூரி, கடந்த மாதம் 19ம் தேதி நிமோனியா காய்ச்சல் காரணமாக டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராகக் கடந்த 2015ம் ஆண்டு முதல் சீதாராம் யெச்சூரி செயல்பட்டு வருகிறார். 72 வயதான சீதாராம் யெச்சூரி மூன்றாவது முறையாக அந்தப் பொறுப்பைக் கவனித்து வருகிறார். மூன்றாண்டுக ளுக்கு ஒருமுறை நடைபெறும் அக்கட்சியின் பொதுச் செயலாளர் தேர்தலில் வெற்றிபெற்று மூன்றாவது முறையாகப் பதவியில் உள்ளார்.

அண்மையில் கண்புரை அறுவை சிகிச்சை செய்து கொண்ட சீதாராம் யெச்சூரி, கடந்த மாதம் 19ம் தேதி நிமோனியா காய்ச்சல் காரணமாக டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் உடல்நிலை மோசமடைய அவர் அவசர சிகிச்சைப் பிரிவுக்கும், அதனைத் தொடர்ந்து தீவிர சிகிச்சைப் பிரிவுக்கும் மாற்றப்பட்டார்.

இந்நிலையில், சீதாராம் யெச்சூரிக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டு அவருக்கு சுவாசக் கருவிகளின் உதவியுடன் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் அவர் நேற்று பிற்பகல் மறைவெய்தினார்.

யெச்சூரி அவர்களின் மறைவுக்கு பல்வேறு கட்சித் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.



வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நேற்று (12.09.2024) வேளாண்மை நிதிநிலை அறிவிப்புகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி. அபூர்வா, வேளாண்மைத் துறை இயக்குநர் பி.முருகேஷ், தலைமைப் பொறியாளர் (வே.பொ) ஆர்.முருகேசன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வாடிப்பட்டியில் பேரறிஞர் அண்ணா 116வது பிறந்தநாள் விழா!

# மதுரை வடக்கு மாவட்டத்தில் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!



மதுரை, செப் 13-
பேரறிஞர் அண்ணா அவர்களின் 116ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வாடிப்பட்டியில் அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, இனிப்புகள் வழங்க உள்ளதாகவும், இந்நிகழ்ச்சியில் கழகத்தினர் திரளாக பங்கேற்குமாறு மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையில் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:-

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை கழகத்தினருக்கு போதித்து, அவ்வழியில் செயலாற்ற அறிவுறுத்திய காஞ்சி கண்ட புனிதர், தமிழ்நாட்டு மக்கள் மற்றும் கழகத்தினரால் அண்ணா என்று பெருமையுடன் அழைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்களின் 116 வது பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் சிறப்புடன் கொண்டாடும் வகையில் வாடிப்பட்டியில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்த பெருமை சேர்த்த பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு வரும் 15.09.2024ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி அளவில் பேரறிஞர் அண்ணா பேருந்து நிலையம் முன்பாக உள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்து, கழகத்தினர் மற்றும் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்படும்.

இந்த சிறப்பு மிக்க நிகழ்ச்சியில் மதுரை வடக்கு மாவட்டத்திற்கு டட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொது உறுப்பினர்கள், கழகத்தினர் என அனைவரும் பெரும் திரளாக பங்கேற்று சிறப்பிக்குமாறு மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையில் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பேரறிஞர் அண்ணா 116-வது பிறந்தநாள் விழா!

# மதுரை மாநகர் மாவட்டத்தில் திருவுருவச் சிலைக்கு மரியாதை!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிக்கை!



மதுரை, செப். 13-
மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கடமை! கண்ணியம்!! கட்டுப்பாடு!!! என்ற தாரக மந்திரத்துக்கு சொந்தக்காரர் “பேரறிஞர் அண்ணா அவர்களின் 116வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு” மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் 15.09.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் நெல்பேட்டையில் உள்ள “பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச்சிலைக்கு” மாலை அணிவித்து மரியாதை செய்யப்படவுள்ளது.

இந்நிகழ்வில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, வட்ட கழக செயலாளர்கள், ஒன்றிய, பேரூர், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**“திமுக பவள விழா ஆண்டு முப்பெரும் விழா” இல்லங்கள் தோறும் கழக கொடி ஏற்றுவோம் !**

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின் படி, பேரறிஞர் அண்ணா அவர்களால் தொடங்கப்பட்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கட்டிக் காக்கப்பட்ட திராவிட முன்னேற்ற கழகத்தின் பவள விழா ஆண்டு முப்பெரும் விழாவை முன்னிட்டு “இல்லந்தோறும் கழக கொடி” கழக உடன்பிறப்புகள் வீடுகள், அலுவலகங்கள், வணிக வளாகங்களில் கழக இரு வண்ண கொடி ஏற்றி, பகுதி, வட்டம், ஒன்றியம், பேரூர், கிளை கழகங்கள், வீதிகள் தோறும் கழக கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சிவகங்கை நகர் மன்ற துணைத் தலைவர் தந்தை மலைச்சாமி மறைவு!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அஞ்சலி!

சிவகங்கை. செப். 13.
சிவகங்கை மாவட்ட சுற்றுச்சூழல் அணி தலைவர் எம்.கார் கண்ணன் தந்தை மலைச்சாமி இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

சிவகங்கை மாவட்ட சுற்றுச்சூழல் அணி தலைவர் சிவகங்கை நகர்மன்ற துணைத்தலை வர் எம். கார் கண்ணன் தந்தை மலைச்சாமி. (வயது 75). உடல்நலக்குறைவால் சிவகங்கையில் இயற்கை எய்தினர். இவருக்கு மனைவி, இரண்டுமகன் கள், இரண்டு மகள்கள் உள்ளார்கள். மறைவெய்திய மலைச்சாமி உடலுக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி கார் கண்ணன் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

ஒன்றிய செயலாளர்கள் எம்.ஜெயராமன், திருமலைமுத்துராமலிங்கம், சிவகங்கை நகர் கழக செயலாளர் சி.எம்.துரை. ஆனந்த் உட்பட ஒன்றிய நகர கழக நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினார்கள்.




தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் தொகுதி தெற்கு ஒன்றியம் தென்கரை பேரூர் பகுதியில் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச் செல்வன் எம்.பி. இல்லம்தோறும் கழகக் கொடி ஏற்றி துவக்கி வைத்தார். உடன் சரவணகுமார் எம்.எல்.ஏ. பேரூர் செயலாளர் பாலமுருகன் பேரூராட்சி தலைவர் நாகராஜ் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

திண்டுக்கல்லில் விழா: அமைச்சர் அர.சக்கரபாணி பங்கேற்பு!

# பெண்களின் வாழ்வாதாரத்தை காப்பாற்றி வருகிறார் முதல்வர்!

## மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்கி – அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!



திண்டுக்கல், செப்13-
முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில் சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவிகள் வழங்கி பெண்களின் வாழ்வாதாரத்தை காப்பாற்றி வருபவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் என்று ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் எஸ்எஸ்எம். பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற சுய உதவி குழுக்களுக்கு கடனுதவிகள் வழங்கும் விழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ. பெரியசாமி பேசினார். சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவி வழங்குவதால் மைக்ரோ பைனான்ஸ், கந்துவட்டி கொடுமையிலிருந்து பெண்கள் பாதுகாக்கப்பட்டுள்ளனர் என்று உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி விழாவில் பேசினார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள சுய உதவி குழுக்களை சேர்ந்த பெண்களுக்கு கடனுதவிகள் வழங்கும் விழா எஸ்.எஸ்.எம். பொறியியல் கல்லூரியில் உள்ள சென்னிமலை கவுண்டர் கருணை அம்மாள் அரங்கத்தில் நடைபெற்றது. விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் மொ.ந.பூங்கொடி தலைமை தாங்கினார். திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், பழனி சட்டமன்ற தொகுதி தி.மு.க. உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார், திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன், திண்டுக்கல் மாநகர மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், துணை மேயர் ராஜப்பா, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், ரெட்டியார்சத்திரம் ஒன்றிய பெருந்தலைவர் ப.க. சிவகுருசாமி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, திட்ட இயக்குநர் திலகவதி கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் காந்திநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசும் போது தமிழகத்தை சேர்ந்த பெண்கள் பொருளாதாரத்தில் உயர வேண்டும் அவர்கள் வாழ்வாதாரம் செழிக்க வேண்டும் என்பதற்காக கலைஞர் அவர்கள் சுயஉதவிக்குழு பெண்களுக்கு கடனுதவி வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்தார். அவர் வழியில் வந்த திராவிட மாடல் ஆட்சி நாயகன் கழகத்தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சுயஉதவிக் குழுக்களுக்கு கூட்டுறவுத்துறை மூலம் கடனுதவி வழங்கி உடன் 5 பவுன்களுக்கு குறைவாக அடமானம் வைத்திருப்பவர்களுக்கு தள்ளுவடி செய்து அவர்களின் வாழ்வாதாரத்தை காப்பாற்றினார். மதுரையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுதுறை, சிறப்பு செயலாக்க திட்ட அமைச்சருமான உதவியநிதி ஸ்டாலின் அவர்கள் மதுரை சுயஉதவிக்குழு பெண்களுக்கு கடனுதவி வழங்கி தமிழகம் முழுவதும் 2ஆயிரத்து 735கோடி மதிப்பில் கடனுதவி வழங்கப்பட உள்ளன. அதன் தொடர்ச்சியாக திண்டுக்கல் மாவட்டத்தில் சுய உதவிக்குழு பெண்களுக்கு கடனுதவி வழங்கப்படுகிறது என்றார்.

அவரை அடுத்து பேசிய தி.மு.க. மாநில துணைப் பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி பேசும் போது தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி நடைபெறும் போதெல்லாம் பெண் சமுதாயம் முன்னேற்றம் அடைந்து வருகிறது. கடந்த திமுக ஆட்சியின் போது இலவச எரிவாயு அடுப்பு, இலவச கலர்டிவி, வங்கிகடனை தள்ளுபடி செய்தோம் ஒரு வீட்டிலிருந்து திருமணம் முடிந்து செல்லும் மணப்பெண்ணுக்கு சீர் வரிசையாக கலைஞர் டிவி வழங்கிய நிகழ்ச்சியும் உண்டு. தமிழகத்தில் குடிசை வீடுகள் இல்லாத நிலைமையை உருவாக்க ஊரக வளர்ச்சித் துறை சார்பாக கலைஞரின் கனவு இல்ல திட்டம் மூலம் 8லட்சம் வீடுகள் கட்ட திட்டமிட்டு இந்த வருடம் சுமார் 1லட்சத்து 50ஆயிரம் வீடுகள் வரை கட்டப்பட உள்ளது. ஆத்தூர் தொகுதியில் மட்டும் 2500 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட உள்ளன. தமிழகத்தில் பெண் சமுதாயத்தை முன்னேற்ற தி.மு.க. செயல்படுத்தும் அனைத்து திட்டங்களிலும் பெண்களை முன்னேற்றக் கூடிய வகையில்தான் இருக்கும் குறிப்பாக மகளிருக்கு இலவசப் பேருந்து, கல்லூரி மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கியதால் அவர்களின் வாழ்வாதாரம் மேன்மை அடைந்துள்ளது.

குறிப்பாக மாதம் ஒன்றுக்கு சராசரியாக ரூ.10 ஆயிரம் வரை ஒரு குடும்பத்திற்கு தமிழக அரசு மறைமுகமாக வழங்கி வருவதால் அவர்கள் சேமிக்க தொடங்கியுள்ளனர். பெண் சமுதாயத்தை முன்னேற்று வதற்காக அயராது உழைத்து வரும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், இளைஞர்களை மேம்படுத்தி அவர்களை விளையாட்டு துறையில் ஊக்கப்படுத்தி அரசு துறையில் வேலைவாய்ப்பு கிடைக்கும் அளவிற்கு கிராமப்புற இளைஞர்களை மேம்படுத்தி வரும் வருங்கால தமிழகம் அன்புத்தம்பி உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் நாம் என்றும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்றார்.

விழாவில் அமைச்சர் ஐ. பெரியசாமி அவர்கள் 1392 சுயஉதவி குழுவினருக்கு ரூ.123.54கோடி வங்கி கடனுக்கான ஆணைகளை வழங்கி வாழ்த்தினார். நிகழ்ச்சியில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. துணை செயலாளர்கள் ஆ.நாகராஜன், பிலால் உசேன், ஒன்றிய செயலாளர்கள் ரெட்டியார்சத்திரம் மணி, திண்டுக்கல் ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், வெள்ளிமலை, கிழக்கு மாவட்ட திமுக இளைஞரணி அமைப்பாளர் கணேசன், துணை அமைப்பாளர் ப.ராஜேஷ் பெருமாள், ஒன்றிய துணை பெருந்தலைவர் ராஜேஸ்வரி, மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், பொதுக்குழு உறுப்பினர் திண்டுக்கல் அக்பர், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் முருகாந்தம் பொறியாளர் அணி அமைப்பாளர் செந்தில்குமரன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் கும்மம் பட்டி விவே கானந்தன், தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், மாவட்ட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் அருண் ஜெகநாதன், அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், மாவட்ட கவுன்சிலர்கள் சுதா செல்வி ஆரோக்கியமேரி, சுப்புலெட்சுமி சண்முகம், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் செல்வம், கன்னி வாடி பேரூராட்சி மன்ற தலைவர் தனலெட்சுமி சண்முகம், ஸ்ரீராமபுரம் பேரூராட்சிமன்ற தலைவர் சகிலாராஜா, ஊராட்சி மன்ற தலைவர்கள் சின்னு, பழனிச்சாமி, புதுசத்திரம் மெர்ஸி (எ) லெட்சுமி, கோனூர் வெள்ளைதாய் தங்கபாண்டியன், காங்கிரஸ் வட்டார தலைவர்கள் நவாபட்டி முருகானந்தம், ரெட்டியார்சத்திரம் முருகேசன், ரெட்டியார்சத்திரம் நிலவள வங்கி முன்னாள் மேலாளர் சக்கரவர்த்தி மணிமாறன், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் புதுக்கோட்டை ரமேஷ், வீரக்கல் காங்கேயன், மாவட்ட பிரதிநிதி எல்லை ராமகிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள் ரூபன் டென்சிங்ராஜா, இளங்கோ, ஒன்றியகுழு உறுப்பினர்கள் காளீஸ்வரி மலைச்சாமி, கோனூர் திருப்பதி, புதுக்கோட்டை நாகலெட்சுமி ரமேஷ், சுமதி கனேசன், ஒன்றிய தொண்டரணி அமைப்பாளர் கதிரயன்குளம் பாலன், முன்னாள் ஒன்றியகுழு உறுப்பினர் கொம்பன் (எ) பாலசுப்பிரமணி, ஒன்றிய இலக்கிய அணி அமைப்பாளர் கோயில் கண்ணன், கோட்டைப்பட்டி ஊராட்சி செயலாளர் கமல கண்ணன், தி.மு.க. நிர்வாகி பாலம் பாண்டியார். மாவட்ட பிரதிநிதி பெருமாள், டாஸ்மாக் வடிவேல், சிறுபான்மையினர் அணியை சேர்ந்த முஜீப் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் பாளை பி.பி.எல். திருமண மண்டபத்தில் மாவட்ட அவை தலைவர் முருகன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் பங்கேற்று ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார்.உடன் சுப.சீதாராமன்,மாலைராஜா, விஜிலா சத்யானந்த்,பெருமாள், அப்துல்வகாப் எம்.எல்.ஏ. சு. சுப்பிரமணியன்,ஏ.எல்.எஸ். லட்சுமணன், பேச்சிபாண்டியன், தர்மன்,சுரேஷ்,கிரிஜா குமார், சரவணன்,ராஜ்,சுப்பிரமணியன், நமச்சிவாயம், உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.